Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 141

யாழ்ப்பாணம் ஆனி 19 ஜய வருஷம் 9 சனிக்கிழமை (3-7-71)

3 JUL 1971
UNIVERSITY OF JAFFNA GRADUATE LIBRARY

டன்லப்
குட்இயர்
டயர்கள் ரூ. ச.
5-25-16 — 186-75
5-90 14 — 189-00
ரிஸிஸ்டேன் புஸ்தகமும்
1971-ம் ஆண்டு டெக்ஸும்
காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்விதி, வல்வெட்டித்துறை.
போன் 34

கட்சியிலிருந்து விலக்கப்பட்டாலும் கடமைகளை நிறைவேற்றுவேன்!

— சி.எக்ஸ்.மார்ட்டின்

கொழும்பு,வெள்ளி

"நான் கட்சியிலிருந்து விலக்கப்படலாம். விலக்கப்பட்டாலும் எனக்குச் சில கடமைகள் இருக்கின்றன. அவைகளை நிறைவேற்றுவேன்" என்று தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் எம்.பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் அரசியல் நிர்ணயசபையில் இன்று பேசுகையில் கூறினார்.

அரசியல்நிர்ணயசபை நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி இனிக் கலந்து கொள்வதில்லை என்று முடிவு மேற்கொள்ளப்பட்ட பின்னரும் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்டு யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றிபெற்ற திரு.சி.எக்ஸ் மார்ட்டின் இன்று அரசியல் நிர்ணயசபை கூட்டத்தில் கலந்து கொண்டார்.

"எனது கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே நான் அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் கலந்து கொள்கிறேன்" என்று திரு. மார்ட்டின் கூறினார்.

மந்திரவாதி பிளையாட்டு நடத்துகிறார்கள் கொல்வின்!

செனட்டர் நடராசா கூறுகிறார்

கொழும்பு, வெள்ளி

"மந்திரவாதி பையிலிருந்து சாமான்களை எடுப்பதுபோல் அடிப்படைத் தீர்மானங்களை அரசியலமைப்பு விவாதமின்றி நிறைவேற்றுகிறார். மந்திரிசபை தங்களிடத்தில் சொல்லிக்கொண்டு திருத்தங்களை எல்லாம் நிராகரிக்கிறார்" என்று செனட்டர் திரு. க. நடராசா செனட்சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அடிப்படைத் தீர்மானங்களை அரசியல் நிர்ணயசபை உருவாக்கவேண்டுமே தவிர அமைச்சர் கொண்டுவருவதில் அர்த்தமில்லை. அப்படியானால் அரசியல் நிர்ணயசபையே தேவையில்லை" என்றும் அவர் சொன்னார்.

நிறைவேற்றப்படும் அடிப்படை உரிமைகள் சர்வதேச அடிப்படை உரிமைகளுக்கு ஒப்பாக இருக்கவேண்டும். ஆனால் இன்று நிறைவேற்றப்படும் அடிப்படை உரிமைகளில் இரண்டைத்தவிர மற்றவை விரோதமாகவே உள்ளன. பத்து லட்சம் நாடற்றவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது?" என்று செனட்டர் நடராசா கேட்டார்.

மொழிப் பிரச்னைக்கு சமரச தீர்வுகாண

சர்வகட்சி மகாநாடு கூட்ட அரசாங்கம் முன்வரவேணடும்

அரசமைப்பு சபையில் 'நவம்' யோசனைக்கு அஸீஸ் ஆதரவு

கொழும்பு,வெள்ளி

மொழிப்பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. வி, என் நவரத்தினம் கூறிய சர்வகட்சி மகாநாட்டு யோசனையைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வந்து முயற்சி செய்யவேண்டும் என்றுநியமன உறுப்பினரும் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்ரேஸ் தலைவருமான ஜனாப். ஏ. அஸீஸ் இன்று அரசியல் நிர்ணய சபையில் கூறினார்.

அரசியல் அமைப்பு அடிப்படைத்தீர்மானங்கள் 12-ம்,13-ம் இன்று அதிக விவாதமில்லாமலேயே நிறைவேறின.

அரசியல் நிர்ணயசபை அதன் தலைவர் திரு கிரான்வி நிலகரத்தினாவின் தலைமையில் இன்று காலை மீண்டும் கூடியபோது அரசியல் அமைப்புக்கான அடிப்படைத் தீர்மானங்களில் பன்னிரண்டும் பதின்மூன்றும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

12-வது அடிப்படைத் தீர்மானத்தின்மீது பேசுகையிலேயே ஜனாப் அசீஸ் மேற்கண்டவாறு யோசனை கூறினார்.

இந்த சர்வகட்சி மகாநாட்டிற்கு சகல தமிழ் முஸ்லிம் கட்சிப் பிரதிநிதிகளும் தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் அழைக்கப்படவேண்டும் என்றும்ஜனாப் அசீஸ் கூறினார். மொழிப் பிரச்னையில் ஒரு சமரசத் தீர்வு காண்பதற்காக திரு எஸ். மார்ட்டின் மேற்கொண்ட தனிச்சலான முடிவை அவர் பாராட்டியதுடன் அரசியல்

(6-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்காவின் அரச மொழி சிங்களம்!

அரசியல் நிர்ணய சபையில் அடிப்படை தீர்மானம் நிறைவேறியது

கொழும்பு,வெள்ளி

ஸ்ரீலங்காவின் அரசகரும மொழி சிங்களமாக இருக்கவேண்டும்என்ற புதிய அரசியல் சட்டத்தின் பன்னிரண்டாவது அடிப்படைத் தீர்மானம் இன்று அரசியல் நிர்ணயசபையில் நிறைவேறியது.

நிறைவேற்றப்பட்ட 12-வது அடிப்படைத் தீர்மானம் வருமாறு:

ஸ்ரீலங்காவின் அரசகரும மொழி 1956-ம் ஆண்டின் 33-ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்திலே ஏற்பாடு செய்யப்பட்டவாறு சிங்களமொழியாதல் வேண்டும். தமிழ்மொழி பிரயோகப்படுத்தப்படல் 1958-ம் ஆண்டின் 28-ம் இலக்க தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கிணங்க விடுத்தல் வேண்டும்.

13ம், 14ம், 15ம் அடிப்படைத் தீர்மானங்களும் இன்று நிறைவேற்றப்பட்டன. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

13-வது தீர்மானம் அரசாங்க நிதியின்மீது தேசிய சபைக்கு பூரணமாக கட்டுப்பாடிருத்தல் வேண்டும். தேசிய சபையினால் நிறைவேற்றப்படும் சட்ட அதிகாரத்தின் பிரகாரம் அல்லது அதன்மூலமாக அல்லாது எந்த விதமான வரி அல்லது விதவர் அல்லது ஏனைய அறவிடு எதுவும் எந்த உள்ளூர் ஆட்சிச் சபையினாலோ ஏனைய பகிரங்க அதிகாரியினாலோ விதிக்கப்படலாகாது.

6-ம் பக்கம் பார்க்க

ஜே.ஆர். கூறுகிறார்

கொழும்பு வெள்ளி

'உலகத்தில் 180 முக்கிய மொழிகள் உள்ளன. இவற்றில் 12 சர்வதேச மொழிகளாக வுள்ளன. இப்பன்னிரண்டு சர்வதேச மொழிகளில் ஒரு மொழியையாவது கற்பிக்கவேண்டும் ஆங்கிலம் ஏற்கனவே கற்பிக்கப்பட்டுவந்ததால் அந்த மொழியை இலங்கை மக்கள் கற்கலாம்.

இவ்வாறு இன்று அரசியல் நிர்ணய சபையில் பேசிய ஜே. ஆர். ஜயவர்த்தனா கூறினார்.

நேற்று நடந்தது

விண்வெளி வீரரின் இறுதிச் சடங்குகள்

மாஸ்கோ, ஜூலை 2

மரணமடைந்த சோவியத் விண்வெளி வீரர்கள் மூவரின் இறுதிச் சடங்குகள் இன்று செஞ்சதுக்கத்தில் நடைபெற்றன. வெளிநாட்டுப் பிரமுகர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் துயரம் நிறைந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதி நிக்சனின் சார்பில் அவரின் பிரதிநிதியாக அப்பலோ-10 விண்வெளி வீரர் தோமஸ் ஸ்ருவட் கலந்துகொண்டார் தனம்செய்யப்பட்ட வீரர்களின் அஸ்தி கிரெம்ளின் சுவரில் ஏற்கனவே மரணமான விண்வெளிவீரர்களின் அஸ்திகளுக்குப் பக்கத்தில் புதைக்கப்பட்டது.

வரி விளம்பரம்

தேவை

சித்திரவேலையில் ஆர்வமுள்ள பெண்கள் தேவை. தராதரங்களுடன் 5-7-71 பிற்பகல் 1 மணிக்கும் 5 மணிக்குமிடையில் நேரில் சமுகம் தரவும். 138, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
3238

விற்பனைக்கு

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கக்கூடிய 2 இலக்ரிக் வாட்டர் பம்ப் (Electric Water Pump 2" Suction, detivery) இங்கிலாந்திலிருந்து புதிதாக வரவழைக்கப்பட்டுள்ளது. விலை விபரங்கட்கு நேரில் பார்வையிடவும்: K.S. பாலசிங்கம், கொழும்புத்துறை தபால்தந்தோடுக்கு முன்பாக, 90 கொழும்புத்துறை ரோடு, யாழ்ப்பாணம்.
3237

கல்வி

தைபம்:
விஞ்ஞான முறைப்படி வெட்டுதல், பூவேலை, பெயின்ரிங் முதலியன நான்கு மாதத்திற்குள் கற்பித்துக்கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- செல்வி கு. சதாசிவம், முத்தத்திவீதி மானிப்பாய்
3241

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

வகுப்புகள்

ஆங்கில பாடத்திற் நான்காம் வகுப்பிலிருந்து எஸ் எஸ். ஸி. வகுப்பு வரையில் ரியூஷன் எடுக்க விடுப்பப்படுவோர் விளம்பர இல. 3239 C/o சமதர்மம் யாழ்ப்பாணத்திற்கு விண்ணப்பிக்கவும்.
3239

நாகமஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி 2-30, 6-30, 9-30
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
நடித்த
சாரதா

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
பி ப 2-30, 6-00 10-00
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
கண்ணன்
என் காதலன்

ஸ்ரீ காளிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 6 00, 9-00
வொஜி - நிர்மலா
நடித்த
லக்ஷ்மி
கல்யாணம்

ராணி (யாழ்ப்பாணம்) ரவிச்சந்திரன் - லட்சுமி தங்கவேலு - விஜயஸ்ரீ
பி. ப. 2-30 இரவு 6-30, 10-00 நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்) முத்துராமன் சுந்தரராஜன் நாகேஷ் — ராகினி லக்ஷ்மி,
பி. ப. 2-30 இரவு 6-30, 9-45 நடித்த
3வது வாரம் நவக்கிரகம்

யாழ். வின்ஸர் வெண்திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டமையால் பழைய நேரத்திற்கு காட்சிகள் காண்பிக்கப்படும்.
★ ஜெமினி கணேசன் ★ விஜயகுமாரி
நாகேஷ் - ராமபிரபா - ராஜஸ்ரீ - அசோகன்
நடித்த
மனைவி

வெலிங்டன் யாழ்ப்பாணம்
10-30, பி. ப. 2-30, இரவு 6-30, 10-00
★ சிவாஜி கணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

யாழ். நகரில்
'லிடோ'
தியேட்டர் திறப்புவிழா
5-7-71 திங்கட்கிழமை
★ சிவாஜி ★ சாவித்திரி
நடித்த
சரஸ்வதி சபதம்

காங்கேசன்துறை பட்டினசபை
வேலை விளம்பரம்

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவரால் கீழே குறிப்பிடும் வேலைகளை சகல உபகரணங்களுடனும் செய்து முடிப்பதற்கு விண்ணப்பப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

விண்ணப்பப்பத்திரங்கள் ஒவ்வொன்றும் பட்டினசபை அலுவலகத்தில் 19-7-71-ந் திகதி நடுப்பகல் 12 மணி வரையும் நன்நற்பிக்கைப் பணமாக ரூபா 25/- பத்திர வேதனம் 2/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் அரசாங்கத்தில் அல்லது ஸ்தலஸ்தாபனத்தில் ரூபா 10,000/- க்குக் குறையாத தொகைக்குப் பதிவு செய்யப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் இணைப்பிரதியுடையதாக, இருபிரதிகளும் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 20-ம் திகதி நடுப்பகல் 12 மணிக்குப் பிற்காமல் பட்டினசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பெட்டியிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

இதைப்பற்றிய விபரங்கள் யாவும் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பட்டினசபைத் தலைவரிடம் அறிந்துகொள்ளலாம்.

(1) நாகதாதர் கோவில் வீதிக்குக் கலப்பு பதித்துத் தார்ஊற்றல்
(2) கலைவாணி வீதி கலப்பு பதித்துத் தார் ஊற்றுதல்.
(3) 6-ம் வட்டாரத்திலுள்ள டச்சு வீதிக் கருங்கலையில் வடிகால் அமைத்தல்.

இ. குருசாமி.
தலைவர்
பட்டினசபை,
காங்கேசன்துறை.

பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன்துறை
1-7-1971
2884

உடுப்பிட்டி, வெல்லி கரிக்கட்டுமூலை கெற்குக் இராச சபை பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட பாதுகாப்புப் படையினரின் நிதிக்கு 100 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30,
பி. ப. 2 30,
இரவு 6-30, 10-00
ஜெய்சங்கர் — லக்ஷ்மி
(இருவேடங்களில்)
நாகேஷ், விஜயகுமாரி
சுந்தரராஜன்
நடித்த
மகனே
நீ வாழ்க

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி 2-00 இரவு 9-45
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
விடிவெள்ளி

Daily at 5-15, 7-15 p. m
Burt Lancaster
in
SCALP HUNTERS
(Color)

ஆயுள்வேத வைத்திய சபை

பதிவுசெய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் புத்தகங்கள்விநியோகித்தல்

1961 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க ஆயுள்வேத சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் உருவாக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களின் ஒழுக்காற்றுப் பிரமாணங்கள் ஆயுள்வேத வைத்திய சபையினால் 2-7-1971 இல் வெளியாகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். இவ் ஒழுக்காற்றுப் பிரமாணங்கள் 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குக்கொண்டு வரப்படும். இவ் ஒழுக்காற்றுப் பிரமாணத்தின் 12 ஆம் பந்தியில் கூறப்பட்டவாறு, ஆயுள்வேத வைத்திய சபையினால் அங்கீகாரம் பெற்ற மருத்துவச் சான்றிதழ்ப் புத்தகங்களை மொரலை, கொழும்பு வீதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். ஆயுள்வேத வைத்தியர்கள் மருத்துவச்சான்றிதழ் புத்தகங்களைப்பெறும் பொழுது ஆயுள்வேத வைத்திய சபையினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபாலில் பெறவிரும்புவோர் தமது அடையாள அட்டையினை ஒப்பிடப்பட்டபின்னர் திருப்பி அனுப்புவதற்காக பதிவுத்தபாலில் எனக்கு அனுப்புதல்வேண்டும்.

100 சான்றிதழ்களை உள்ளடக்கிய ஒரு புத்தகத்தின் விலை ரூபா 5/- ஆகும் அதற்குரிய தபால் கிசவு ரூபா 1/60 ஆகும் இவற்றைத் தபாலில் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் எனது பெயருக்கு ரூபா 5/- பெறுமதியான காசுக்கட்டளை/தபால்கட்டளை மூலமாகவும் தபால் செலவான ரூபா 1/60க்குப் பெறுமதியான முத்திரைகளையும் அனுப்புதல்வேண்டும்.

அடையாள அட்டையினை இதுவரையும் பெறாத பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்கள், அதற்குரிய விண்ணப்பப்பத்திரத்தில் மருத்துவச் சான்றிதழ் புத்தகங்களைப் பெறும் விண்ணப்பத்துடன் விண்ணப்பிக்கலாம். மருத்துவ சான்றிதழ் புத்தகங்களைப் பின்பும்பெறுவதற்கு இவ்வடையாள அட்டைகள் முக்கியமானவையாகும். அடையாள அட்டைக்குரிய ரூபா 1/- பெறுமதியான காசுக்கட்டளை/தபால் கட்டளையினை வேறாக அனுப்புதல் வேண்டும்.

டி. எச். எதிரிசிங்க
பதிவாளர்,

ஆயுள்வேத வைத்தியசபை
325, கொட்டா வீதி,
கொழும்பு-8
24-6-1971.
2883

தேவை

அனுபவமுள்ள கணக்கு லிகிதர் தேவை. எஸ்ரேற் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். ஒப்டோன் லிமிடெட், யாழ்ப்பாணம்.
3242

விற்பனைக்கு

ஒரு யூனிவெக் டீப் ப்றீஸர் (Freezer) 12.5 ச. அடி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள: ஒப்டோன் லிமிடெட், யாழ்ப்பாணம்.
3243

அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட தற்போதிருக்கக்கூடிய சகல வாவி மலகூடங்களையும், நீரடைப்பு அல்லது பதனழிக்கும் தொட்டி மலகூடங்களாக மாற்றுவதற்கு, உதவி பெறும் திட்டமொன்றை, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஆலோசித்துவருகிறது.

அளிக்கப்படவுள்ள உதவியின் அளவும், தன்மையும் அப்பேற்பட்டமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் இவ் அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றபின்பே முடிவுசெய்யப்படும்.

அப்பேற்பட்ட மாற்றத்திற்கும், உதவிக்குமான விண்ணப்பங்கள், 15-7-1971 இல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற கௌரவ வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்,

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
27-6-1971.
2886

கவிதை உலகில் புதுமையை ஏற்படுத்தினார்

உடுப்பிட்டி வெல்வி

'கவிதையுலகிலே மது மலர்ச்சியையும், புதுமையையும் பரப்பிய மறைந்த கவிஞர் மாகவி நழத்தக் கவிதை வளத்தை மேம்படுத்தினார். பழமைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுத்துணிச்சலுடன் நவீனபாணியில் தமது கவிதைகளைக் கையாண்டதின் மூலம் புகழ்பெற்று விளங்கும் மாகவியின் கவிதைகள் எம்முள்ளத்தில் என்றும் அவரை நினைவூட்டும்.'

இவ்வாறு அல்வாய் பாரதிதாசன் படிப்பகத்தில் நடைபெற்ற மறைந்த கவிஞர் மாகவி அஞ்சலிக்கூட்டத்தில் பேசுகையில் கவிஞர் கடுகைவோகன் குறிப்பிட்டார். கவிஞர் சதிரவியம் இவ் அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் அரசாங்க உயர் அதிகாரியொருவர் கவிதையுலகில் புகுந்து தமிழுக்கு அணிசெய்தது ஒரு சாதனையே என்றார்.

திரு. ஆ. ஜெகநாதன் உட்பட வேறுபலரும் பேசினர். கூட்டத்தில் ஐந்து நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருமண அழைப்பு

நாகராசா — நாகேஸ்வரி அம்மாள்

நிகழும் விரோதி கிழுத ஆண்டு ஆனி மாதம் 19-ம் திகதி (3-7-71) சனிக்கிழமை பகல் 11 மணி 7 நிமிடம் தொடக்கம் 12 மணி 30 நிமிடம் வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் முல்லைத்தீவு வீ. செல்லையா தம்பதியரின் மூத்தமகன் நிருநிறை செல்வன் நாகராசாவுக்கும் எமது மூத்த மகள் திருநிறைச் செல்வி. நாகேஸ்வரி அம்மாளுக்கும் வவுனியா கந்தசாமி கோவிலில் திருமணம் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். கொண்டாட்டம் எமது இல்லத்தில் 3 நாட்கள் நடைபெறும்.

கி. நாகலிங்கமும், பாரியாரும்,
முகாமையாளர் ஆசிகளும்
ப. நோ. கூ. சங்கம்

கல்விரங்குளம், வவுனியா.
2879

பாக். ராணுவ அட்டூழியம் பற்றி பி.எம்.பிக்கள் குழு கண்டனம்

புதுடில்லி, ஜூலை 2

கிழக்குப் பாகிஸ்தானில் ராணுவத்தினர் படுமோசமான அழிவு வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று உண்மை நிலையை நேரில் அறிவதற்காக வந்திருக்கும் பிரிட்டிஷ் ஆட்சிமன்ற பிரதிநிதிகள் குழு வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

பிரதிநிதிகள் குழுவின் தலைவராகவுள்ள முன்னாள் அமைச்சரும் தொழிற்கட்சி எம்.பி. யுமான திரு. பொட்டம்லி கருத்துத் தெரிவிக்கையில் ராணுவத்தினர் பெரும் அழிவுகளைச் செய்திருக்கிறார்கள் இது ஜெனரல் யாஹ்யாகானின் உத்தரவின்மீது செய்யப்பட்டதா இல்லையா என்பது தெரியவில்லை என்றார்.

இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ள அகதிகளைக் கவனிக்க வேண்டியது உலகநாடுகளின் பொறுப்பு என்று தெரிவித்த குழுவினர் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு தீர்வு ராணுவதானாக்கவாமி லீக்கையும் அதன் தலைவர் ஷேக் முஜிபுர்ரஹ்மானையும் புறக்கணித்துவிட்டு எதையும் செய்யமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சோவியத் உதவி

வங்காளதேச அகதிகளுக்கென சோவியத் யூனியன் அனுப்பிய 3 ஆயிரத்து 500 டன் அரிசி கல்கத்தா துறைமுகம் வந்து சேர்ந்துள்ளது. சோவியத் யூனியன் மொத்தம் 80 ஆயிரம் டன் அரிசியைக் கொடுத்துதவ இணங்கியுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் மாமூல் நிலைமை இன்னும் ஏற்படவில்லையென்று பி.பி.ஸி. நிருபர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். ராணுவத்தினர் நடந்து கொள்ளும் முறையால் மக்களின் அனுதாபத்தைப் பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள் என்று அவர் பி.பி.ஸிக்கு டாக்காவிலிருந்து தெரிவித்துள்ளார்.

டாக்காவில் மார்க்கெட்டுகள் யாவும் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கு மக்கள் வருவதில்லை. எனவே வியாபாரமே இல்லையென்று அவர் தெரிவித்துள்ளார். ராணுவத்தினர் பொதுமக்களைத் தம் முகாம்களை நோக்கி அழைத்துச்செல்வர் ஆனால் அவர்கள் திரும்பி வருவதேயில்லை என்கிறார் அவர்.

யாகில்தானிலிருந்த அமெரிக்க நிருபர் ஒருவர் வெளியேற்றப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பாக் ராணுவத்தில் பிளவு?

பாகிஸ்தான் ராணுவத்தில் பிளவு ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. அதிபர் யாஹ்யாகானுக்கு எதிராக ராணுவத் தளபதி ஹமீதுதின் கை ஓங்கி வருவதாகவும் கூறப்படுகின்றது. இதனால் யாஹ்யாகானின் ஆட்சிக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது. தளபதி ஹமீதுக்கு அரசாங்க அதிகாரிகள் பலரும் ஆதரவாக இருக்கிறார்களாம். இதனால் யாஹ்யாகானுக்கு எதிராக இவரது செல்வாக்கு ஓங்கி வருகின்றதாம். யாஹ்யாகானை வெளியேற்றிவிட்டு ஆட்சியைப் பிடிக்க இவர் திட்டமிட்டுள்ளாராம்.

அடிப்படை உரிமைகளில் கொண்டுவரப்படும் மாற்றம் ஸ்திரமாக்க புதிய மசோதா?

புதுடில்லி, ஜூலை 2

அரசியல் திட்ட அடிப்படை உரிமைகளில் பார்லிமெண்ட் மேற்கொள்ளும் மாற்றங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் விதத்தில் புதிய மசோதா ஒன்றைக் கொண்டு வருவது பற்றி யூனியன் மந்திரி சபை கூடி ஆராய்ந்தது.

அடிப்படை உரிமைகளில் பார்லிமெண்டால் செய்யப்படும் மாற்றங்கள் செல்லுபடியாகாதென கோலக்நாத் வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்துள்ளது.

அடிப்படை உரிமைகளில் பார்லிமெண்ட் செய்யும் மாற்றங்கள் ஸ்திரமானதாக இருக்கக் கூடிய விதத்தில் அரசியல் திட்ட 368-வது ஷரத்தை புதிய மசோதாவில் சேர்த்துக் கொள்வதென்பது குறித்தும் யூனியன் மந்திரிசபை விவாதித்தது.

.....

நிதி உதவி வழங்கினர்

உடுப்பிட்டி, வெள்ளி

அரவெட்டி கிழக்கு, யார்க்கரு என்னுமிடத்தில் 4 வீடுகள் தீக்கிரையான நாகலிங்கம் குடும்பத்தவர்களான நிலையில் தவித்த மு. தங்கராசாவுக்கு கிழவி தோட்டம் சனசமூக நிலைய வாலிபர்கள் 206 ரூபா 50 சதம் நிவாரண நிதியாக வழங்கினர்.

ஜீவனாம்சம் வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு சின்னத்தம்பி காட்டைச் சேர்ந்த மோசஸ் என்பவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தனது இரு பிள்ளைகளுக்கு முல்லைத்தீவு தபால் நிலையத்தில் கடமைசெய்யும் தமது கணவரான குலசிங்கம் தேவசகாயத்திடமிருந்து ஜீவனாம்சப்பணம் பெற்றுத் தரும்படி மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

மனுமீதான விசாரணை முல்லைத்தீவு நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரியாமுன் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிரதிவாதி சார்பில் ஆஜரான புரக்டர் றெஜிஸ்ரேட் "ஒரு பிள்ளை பிரதிவாதிக்குப் பிறக்கவில்லை எனவே விசாரணை செய்தபின் தான் தீர்ப்பு விக்கவேண்டும்" என்று நீதிபதியிடம் கூறினார். நீதிபதி அதை ஏற்றுக் கொண்டு மேல் விசாரணையை ஒக்டோபர் மாதம் 4-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சேதுசமுத்திர திட்டம்

சென்னை, ஜூலை 2

சேதுசமுத்திர திட்டத்தை விரைவில் நிறைவேற்றும்படி, டெல்லியிடம் தமிழக அரசு வற்புறுத்தியுள்ளது. இதற்கான திட்டத்தின் முழு வடிவையும் கொண்ட அறிக்கை பொன்று 1968ம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசிடம் கொடுக்கப்பட்டது என்றும் அது இன்று வரை மத்திய அரசின் ஆய்வில் இருந்து வருகிறது என்றும் கடந்த வாரம் சட்டசபையில் அமைச்சர் சி பா ஆதித்தனார் தெரிவித்தார்.

தற்போது இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து சென்னைக்கு வருகிற கப்பல்கள், இலங்கையை சுற்றிவர வேண்டியுள்ளதனால் சேதுக்காலாய்வெட்டப்பட்டால் கப்பல்கள் குறுக்கு வழியில் வரமுடியும் எனவும் கூறப்படுகிறது.

.....

உற்பத்தி அதிகரிக்க பாடுபடவேண்டும்

கோட்டை, வெள்ளி

"நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுத்தாபனங்கள் பெரும்பங்கு ஏற்க வேண்டும். நாட்டின் தற்போதைய உற்பத்திநிலைமை சரியில்லாததால் உற்பத்திநிலை அதிகரிக்கப்பாடுபட வேண்டும்."

இவ்வாறு மத்திய வங்கி மண்டபத்தில் முகாமை அமைப்பு சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உரையாற்றுகையில் கூறினார்.

.....

தீவுப்பகுதி துறைமுகங்கள்பற்றி அறிக்கை

வேலணை வெள்ளி

ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள குறிகாட்டுவான் நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய துறைமுகங்களைப் பார்வையிட்டு இத்துறைமுகங்கள்பற்றி அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக துறைமுக ஆணைக்குழுவின் பொறியியலாளர் இங்கு வந்து மேற்படி துறைமுகங்களைப்பார்வையிட்டு வருகிறார்.

.....

புதிய பதிவுகாரர்

முல்லைத்தீவு, வெள்ளி

கரைதுறைப்பற்று திருமணப்பதிவுகாரராக இருந்த திரு. வே. சுப்பிரமணியம் இளைப்பாறியதைத் தொடர்ந்து முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பு திரு நல்லையா சோமநாதன் தற்காலிக திருமணப்பதிவுகாரராக வவுனியா மாவட்ட பதிவுகாரரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

.....

அன்னதானம்

அம்பன், வெள்ளி

அம்பன் கரம்பான் தூவுக் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்திருவிழா இன்று ஆரம்பமாகவிருக்கிறது. அன்னதானமும் நடைபெறும்.

பெரியார் சொல்கிறார்

கருணாநிதி சிறந்த ராஜதந்திரி!

விருத்தாசலம், ஜூலை, 2

"கருணாநிதி சிறந்த ராஜதந்திரி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் மிக அக்கறையுடன் செயல்படுகிறார்."

இவ்வாறு விருத்தாசலம் வஞ்சாயத்து யூனியன் திராவிடக்கழகத் தலைவர் ஈ. வெ. ரா. பெரியார் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியின் உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசிய போதுகுறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

ஆட்சியை, பதவியை பெரிதாக நினைக்காமல், சமுதாய மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்று வாழ ஆவன செய்துவருகிறார். அவர், மதுவிலக்கை ரத்து செய்ய முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன் என்றார்.

.....

'சிங்களம் கற்க வசதி செய்க'

சுழிபுரம், வெள்ளி

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துகலவையாளர்களிடமிருந்து தேர்ச்சிப் பரீட்சைக்குப் படிப்பதற்கு ஓய்வுவசதி எதுவுமின்றி மிகவும் சிரமப்படுவதாகவும் இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களிலும் பின்தங்கிய பிரதேசங்களிலும் இருக்கும் வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதால் சிங்களம் படிக்க எவ்வித வசதியும் இல்லாதிருப்பதாயும் இவர்களுக்குத் தனியாக மூலம் சிங்களம் கற்க ஒழுங்குசெய்து தர வேண்டுமென்றும் கோரி அரசாங்க மருந்து கலவையாளர் சங்க யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் திரு என். எம். கந்தசாமி அரசகரும மொழி ஆணையாளருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

.....

சைவ சமய கலைப்போட்டி

சுழிபுரம், வெள்ளி

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் சைவசமயக் கலைப்போட்டியொன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. திருமுறைப் பண்ணிசைப் போட்டி, சைவ சமய நாடக எழுத்துப் போட்டி, சைவசமய நாடக நடிப்புப்போட்டி ஆகிய போட்டிகளை சங்கம் நடத்துவதாகவுள்ளது. போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு தங்கப் பதக்கங்கள், வெள்ளிப்பதக்கங்கள், கேடயங்கள், கிண்ணங்கள், ரொக்கப்பணம் ஆகியவை பரிசாக வழங்கப்படவுள்ளதாகவும் விரைவில் நடைபெறவிருக்கும் சைவப்புலவர் மாநாட்டில் இப்பரிசுகள் வழங்கப்படுமென்றும் பணி அமைப்பாளர் சைவப் புலவர் திரு. க. செல்லத்துரை தெரிவித்தார்.

சைவப் புலவர் மாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து பல அறிஞர்களை அழைப்பதற்கு சங்கத் தலைவர் வ. செல்லையா, செயலாளர் மு திருஞானசம்பந்தபிள்ளை ஆகியோர் முயன்று வருகின்றனர்.

சோவியத்

விண்வெளித் திட்டம் தொடரும்

மாஸ்கோ, ஜூலை 2

சோவியத் விண்வெளி வீரர்கள் மூவர் மரணமான போதிலும் ரஷ்யாவின் விண்வெளித் திட்டங்கள் தடையின்றி தொடர்ந்து செயல்படும் என்று சோவியத் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்

விண்வெளியில் 23 நாட்கள் தங்கிவிட்டு 24-ம் நாள் பூமிக்குத் திரும்புகையில் மரணமான மூன்று விண்வெளி வீரர்களுக்கும் சோவியத் தலைவர்கள், அதிபர் பொட்கார்னி, பிரதமர் கொஸிஜின், செயலாளர் பிரஸ்னேவ் ஆகியவர்கள் சிறிது நேரம் மௌனமாக இருந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

.....

திருக்கேதீஸ்வரம்

திருப்பணிச் சபை யாழ். குழு

உடுப்பிட்டி, வெள்ளி

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையின் யாழ்ப்பாணம் ஆலோசனைக் குழு நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ரி. முருகேசம்பிள்ளை (உதவி அரசாங்க அதிபர்), செயலாளர்: திரு. ச. அம்பிகைபாகன், உதவிச்செயலாளர்: திரு. இ. சச்சிதானந்தம், தனாதிகாரி: திரு. க. சிதம்பரப்பிள்ளை.

நிர்வாகக்குழு உறுப்பினர்களாக, திரு செ. தனபாலசிங்கம், டாக்டர் வி. ரி. பகவதி, திரு இ. சபாலிங்கம், முதலியார் முத்துத்தம்பி, திரு ஏ. சரவணமுத்து, திரு வ. கார்த்திகேசு, திரு த. குமாரசாமிப்பிள்ளை, திரு சி. சிவகுருநாதன், திரு வி. சண்முகம், திரு கி. சண்முகலிங்கம், திரு ம. ஸ்ரீகாந்தா டாக்டர் க. கனகரத்தினம், திருவாளர்கள்: அ. திருநாவுக்கரசு, அ. பஞ்சாட்சரம், ஏ. எம். குமாரசாமி, எம். சிவசுப்பிரமணியம், வ. இராஜநாத முதலியார், வி. நாகலிங்கம், அ. நாகலிங்கம், எம். கணபதிப்பிள்ளை, சி. நல்லதம்பி, சோமசுந்தரம், மு. மயில்வாகனம், டாக்டர் வி. யோகநாதன், திருமதி வ. அருளம்பலம் ஆகியோரும் சைவக்காரியாதிகாரிகளும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

.....

வேலணை முருகன் தண்ணீர்ப்பந்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

வழமைபோல் இவ்வாண்டும் நயினை நாகபூஷணி அம்பாள் உற்சவ காலத்தில் வேலணை முருகன் கோயிலில் தண்ணீர்ப் பந்தல் திருத்தொண்டை மேலும் சிறப்பாகவும் புனிதமாகவும் நடாத்த மேற்படி தண்ணீர்ப் பந்தல் திருத்தொண்டுச் சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

வடக்கில் நியமனம் பெற்ற விவசாய ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், சனி

கலாலியில் இயங்கிய கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் விவசாய 'டிப்ளோமா' பட்டம் பெற்ற பலருக்கு வடமாநிலப்பாடசாலைகளில் சென்ற மாதம் 25-ம்திகதி முதல் விவசாய ஆசிரிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுள் பெரும்பான்மையோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவாளர்கள் எஸ். கணேசமூர்த்தி, ரி. இராசா, ஏ. ஸ்ரீகாந்தா, செல்விகள் ஆர். ராஜமலர், ஏ. லக்ஷ்மிதேவி, கே. விஜயலக்ஷ்மி, ஏ. பத்மாவதி, ஆர். பூமணி, எஸ். பராசக்தி, எஸ். ருக்மணி, வி. விஜயராணி, வி. லீலாவதி, என். சிவக்கொழுந்து ஆகியோர் முறையே வித்தியானந்தக் கல்லூரி, கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம், ஆடம்பன் மகாவித்தியாலயம், நெல்லியடி மகாவித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம், ஓமந்தை மகாவித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, அனலைதீவு மகாவித்தியாலயம் விக்டோரியாக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பளை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்கல்விக்கு இனி முக்கியத்துவம் அளிப்பதென்ற அரசின் தீர்மானத்துக்கமைய இந்நியமனங்கள் வழங்கப்பட்டதாக அறியக்கிடக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து தொழிற்துறைகளில் ஆசிரிய கலாசாலைகளிலிருந்தான ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுவார்கள் ஆகிய இலத்துக்கும் அவ்வாறே கூடுதலான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்களாம்.

கேதீச்சர புனருத்தாரண சபையின் வருடாந்தக் கூட்டம்

கோப்பாய், சனி

திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மேற்படி சபையின் விதிகளில் திருத்தங்கள் கொண்டுவரவும், ஆகில இலங்கை கொடித்தினம் ஒன்றை ஏற்படுத்தவும் இரு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மேற்படி குழு கொண்டுவரும் திருத்தங்கள் அச்சடித்து சந்தாக்களை ஒழுங்காக வழங்கும் அங்கத்தவர்களுக்கு வழங்குவது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இம்மாதம் 14-ம் திகதி அத்திபாரக்கல் நாட்டுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதோடு இச் சபையின் 30 உபதலைவர்களும் புனருத்தாரண வேலைகளுக்கு கூடியளவு நிதிசேகரிக்க வேண்டும் எனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி உபதலைவர்களின் ஒருவரான திரு. எஸ். ஆறுமுகம் இக் கூட்டத்தில் உரையாற்றுகையில் புதிதாக அத்திபாரக்கல் நாட்டப்பட்ட ஆலயத்தின் பழைய உட்பிரகாரத்தை இடித்து கற்களையும் மண்களையும் அகற்ற நூற்றுக்கணக்கான தொண்டர்கள் சிரமதானம் செய்தனர் எனக் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் பின் வருவோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. எஸ். சோமசுந்தரம், செயலாளர்: திரு. எஸ். சந்தையா, பொருளாளர்கள்: திருவாளர்கள் சி. ஞானபிரகாசம், வி. வைரவசபிள்ளை, வி. முருகேசு. 30 உபதலைவர்களும் 216 பேர் கொண்ட பொதுச்சபையும் 54 பேர் கொண்ட காரியக் கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

தனிக்காரியாதிகாரி பிரிவு நிறுவக் கோரிக்கை

அம்பன், வெள்ளி

'வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி பிரிவில் வடமராட்சி கிழக்குப் பகுதி ஒரு பின்தங்கிய நாடு மட்டுமன்றி பொருளாதார கல்வி வசதி குறைந்த இடமாகும். இந்த நிலையில் இப் பகுதியில் கல்விகற்று மேற்படிப்புப் படிக்க பொருளாதார வசதியின்றி கஷ்டப்படும் இளம் உள்ளங்கள் தொகை குறிப்பிடற்கரியது. மக்கள் அரசாங்கத்திற்கு முன்பிருந்த அரசாங்கம் எத்தனையோ அரசாங்க உத்தியோகங்களை காரியாதிகாரி பிரிவு ரீதியில் வழங்கியது அந்த நேரத்தில் எங்கள் பகுதியில் கல்வி கற்று வேலையற்றிருக்கும் எத்தனையோருவருக்கும் காரியாதிகாரி பிரிவு ரீதியில் வழங்கப்பட்ட உத்தியோகம் கிடைக்க வாய்ப்பின்றிப் போய்விட்டது. காரணமென்ன வெனில், கிராமப்புறத்தில், கல்வி கற்ற மாணவன் பட்டணத்தில் பட்டப்படிப்புப் பெற்ற ஒரு மாணவனுடன் போட்டியிடுதல் இயலாத காரியமாகும். இந்த நிலையில் கிராமப்புறத்திலுள்ளவர்கள் கொடர்ந்தும் பின்தங்கிய நிலையை அடைய வேண்டி ஏற்படுவதுடன் தொழில் வாய்ப்பையும் பெறமுடியாத நிலை ஏற்படுகிறது. எனவே தற்போதய அரசாங்கம் காரியாதிகாரி பிரிவுகளை விஸ்தரிக்க உத்தேசித்துள்ளது இந்த நிலையில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு தனிக்காரியாதிகாரி பிரிவொன்று நிறுவக் கோரவேண்டுமென கீழைக்கரை அபிவிருத்தி முன்னணி இணைப்பாளர் திரு பி. அ. செலஸ்தீன்ராசா கூடத்தகைக் கிராம அபிவிருத்திச் சபைக் கூட்டம் வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி திரு மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்ற போது கேட்டுக்கொண்டவாறு கூறினார்.

.....

மிளகாய்க்கலவை தடுக்க நடவடிக்கை

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்புப் பகுதியில் மிளகாய்த் திருட்டைத் தடைசெய்ய இளைஞர்கள் சேர்ந்து இரவில் ரோந்து சுற்றிவருகிறார்கள். பண்டத்தரிப்பு விவசாயக் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த மிளகாயைத் தோட்டங்களிலே காயவைப்பதால் இரவில் இம்மிளகாய்களைத் திருடர் அள்ளிச்சென்று விடுகின்றனராம். இதனைத் தடுக்குமுகமாக இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தொண்டர் படையை அமைத்து இரவில் ரோந்துசுற்றிவருகின்றனர்.

இன்றைய பலன்

ஆனி மாதம் 19-ந் திகதி (3-7-71)

மேஷம்: எதிர்பாராத இனங்களில் தடைகள் ஏற்பட்டு வரும். தொழில்துறை அவ்வளவு திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை.

ரிஷபம்: நன்மான மிகு திக்கும் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகனசுகமும் கிடைக்கும். குடும்பத்தில் நன்றல்விசும்.

மிதுனம்: தொழில்துறையில் புதிய உத்வேகம் காணப்படும். எந்த நிலைமையையும் கட்டுப்படுத்துவதில் தனிப்புகழ் அடைவீர்கள்.

கடகம்: மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும்.

சிம்மம்: கடன்தொல்லைகள் வலையைத் தரும். உறவினருடன் பிணக்குகள் தோன்றும். நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம்.

கன்னி: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். திடீர் பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

துலாம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப்போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும் நீண்டநாள் அபிலாஷை இன்று நிறைவேறும்.

விருச்சிகம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும். சகோதர வழியால் சஞ்சலம் தோன்றக்கூடும். உஷாராகஇருக்க வேண்டும்.

தனுசு: வினைபொருக்கு விருத்தியுடன் விருந்திற்கும் இடமுண்டு. தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும். சிறப்பான தினம்

மகரம்: மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்புஏற்படும். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

கும்பம்: ஏமாற்றத்தின் தாக்குதல்களால் அவதிப்படுவீர்கள் பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். பொறுமை நன்று.

மீனம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும். வெளியிடத்திலிருந்தும் மகிழ்ச்சிகரமான செய்திகளொன்றும் கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 3—7—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9 00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கிறிஸ்தவ நற்சிந்தனை 6-20 தமிழ்ப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 நிரை கானம், 7-45 இசை வேலை, 8-00 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 கல்விச்சேவை.

இரவு 6-10 மெல்லிசை, 6-15 வயலின், 6-30 கண்ணகி காவியம், 6-45 கிராமியப் பாடல்கள், 7-00 பழஞ்சுவைகள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரை நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

வடமராட்சியில் கரப்ந்தாட்ட விழா

புலோலி, வெள்ளி

வதிரி டயமண்ட் விளையாட்டுக் கழகம் தனது 50-வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விரிந்த அடிப்படையில் கரப்பந்தாட்ட விழாவொன்றை இம்மாதத்தில் நடாத்த இருக்கின்றது. மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் யாழ். குடாநாட்டின் பிரபல கழகங்கள் பங்கு பற்றுகின்றன. பாசிங்கேம், செற் அப் கேம் என இரு பகுதிகளாக நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு பெறுமதிவாய்ந்த பல பரிசுகள் வழங்குவதென்றும் விழாப் பிரதம விருந்தினராக விளையாட்டு அமைச்சரை அழைப்பதென்றும் கழகம் தீர்மானித்துள்ளது.

மென்பந்துக்

கிரிக்கெட் சுற்றுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

கண்டிக்குளி இளஞ்சிங்க சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கடந்தவார முடிவுகள் வருமாறு:

லைமன் வெற்றி

லைமன் 'ஏ' பிரிவு விளையாட்டுக் கழகத்துக்கும், ஓ. எல். ஆர். விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் லைமன் கழகம் 3 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

தேவிகா வெற்றி

திருநெல்வேலி தேவிகா விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், தேவிகா கழகம் 64 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கொய்யாத்தோட்டம் வெற்றி

கொய்யாத்தோட்டம் விளையாட்டுக் கழகத்துக்கும் லைமன் 'பி' பிரிவுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் கொய்யாத்தோட்டக் கழகம் 63 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (தே நி)

.....

கிறீன்பீல்ட் வி. க.

அநுராதபுரம் செல்கின்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட 'பி' பிரிவுக் கோஷ்டி இம்மாதம் 7-ம் திகதி அநுராதபுரத்துக்குச் செல்கின்றது.

அநுராதபுரம் 'கொச்ஸன்' விளையாட்டுக் கழகத்தின் அழைப்பின் பேரில் கிறீன்பீல்ட் கழகம் அங்கு செல்கின்றது.

மேற்படி இரு கழகங்களும் இம்மாதம் 7-ம் திகதி அநுராதபுரம் விளையாட்டு மைதானத்தில் ஓர் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும். (தே நி)

'எழுத்தாளன் தெய்வீகம் வாய்ந்தவன்'

பருத்தித்துறை, வெள்ளி

'எழுத்தாளர் கவிஞர் ஆகியோர் எந்த இனத்தையோ, மொழியையோ சேர்ந்தவர்களாயினும் அவர்கள் தெய்வீகத்தன்மை வாய்ந்தவர்கள். காலத்தால் இறவாத இலக்கியப் படைப்புகளை உருவாக்குவது சாதாரண மனித இயல்புக்கு அப்பாற்பட்டது. இக்காரணத்தாலேயே தெய்வப்புலமைத் திருவள்ளுவரை வள்ளுவப் பெருந்தகையை வாழ்த்துகிறோம்'.

இவ்வாறு நேற்று முன்தினம் வதிரியில் 'மாலவி' யின் மறைவு குறித்து நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை கூறினார். திரு எஸ். தினகரிபிள்ளை கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

தமிழில் சிறந்த இலக்கியங்கள் உருவாக வேண்டுமாயின் சிறந்த படைப்புகளுக்கு வக்கள் மத்தியில் பேராதரவு பெருக வேண்டும் என்றும், தமிழார்வம் வளரவேண்டுமென்றும் திரு கிருஷ்ணபிள்ளை கூறினார்.

.....

பொலிசார் விபத்தில் காயம்

சுழிபுரம், வெள்ளி

சங்கானைப் பொலிஸ் நிலையத்துக்குச்சொந்தமான மோட்டார் சயிக்கிளும் மோட்டார் கார் ஒன்றும் சித்தங்கேணி வடலிபடைப்பு பிரதான வீதியில் மோதிக்கொண்டன. இதனால் மோட்டார் சைக்கிளில் பிரயாணம்செய்த பொலிஸ் உத்தியோகத்தர் காயத்துக்குள்ளானதுடன் இரு வாகனங்களும் சேதமுற்றன. சங்கானைப் பொலிசாரால் விசாரணை நடாத்தப்பட்டது.

.....

பொங்கல் விழா

பல்லவராயன்கட்டு, வல்லவராயன்கட்டு கல்லடம் கற்பகப்பிள்ளையார் நாகபடுவான் ஐயனார், நரசிங்க வைரவமூர்த்தி கம்பளி வயிரவமூர்த்தி ஆகிய தேவஸ்தானங்களில் வருடந்தோறும் நடைபெறும் அபிஷேகம் பொங்கல் விழாக்கள் இவ்வருடம் இம்மாதம் 19- 20-ம் 21-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன

.....

யுனைட்டெட் வெற்றி

அம்பன், வெள்ளி

கரப்பந்தாட்ட வாரத்தின் போது பருத்தித்துறை யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்திற்கும் அம்பன் பிரபொங் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை யுனைட்டெட் 2—0 கேம்ஸால் வெற்றியீட்டியது

.....

அடைவுசீட்டு யாருடையது

காங்கேசன்துறை வீதி சிவன்கோவில் வடக்கு வீதி சந்தியில் அடைவுசீட்டு ஒன்றை கண்டெடுத்து வண்ணார்பண்ணை சேசி பத்மநாதன் சுழநாடு காரியாலயத்தில்ஒப்படைத்துள்ளார். உரியவர் சுழநாடு காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேதீஸ்வர திருப்பணிக்கு மலாயா வாசிகள் உதவி

உரும்பராய் வெள்ளி

திருக்கேதீஸ்வரம் திருக்கோயிலில் சென்ற ஆரும் திகதி பாலஸ்தாபனம் நடைபெற்றது சுவாமி கோயிலுக்கு இரண்டு லக்ஷ ரூபாவும் அம்பாள் கோயிலை அமைக்க ஒருலட்ச ரூபாவும் தேவைப்படுகிறது மலாயாவில் உள்ள அன்பர்கள் அம்பாள் கோயிலைக் கட்டி முடிக்க பொருளுதவி செய்யவாக்களித்துள்ளனர். பழம்பெருமை வாய்ந்த திருக்கேதீஸ்வரநாதர் ஆலயத்தைக் கட்டி முடிக்கவேண்டிய பொறுப்பு யாழ்ப்பாண மக்களையே சார்ந்தது. புண்ணிய கைங்கரியமான இப்பணியில் ஈடுபடுமாறு சைவமக்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வாறு திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபைக்கூடம் அண்மையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர்மண்டபத்தில் நடைபெற்றபோது கேதீஸ்வர புதிய கட்டடச்சபை இயக்குனராக திரு. க. ஆறுமுகம் பேசுகையில் கூறினார்

திரு ஆறுமுகம் மேலும் கூறியதாவது: சிரமதானப் பணியில் அத்திபார வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் 15 ஆயிரம் ரூபா செலவில் முடிக்கவேண்டிய வேலை சுமார் 1,500 ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் திருப்பணி ஓராண்டினுள் பூர்த்தியடைந்து மகாகும்பாபிஷேகமும்நடைபெற ஒவ்வொரு சைவமகனும் உதவவேண்டும். நாவலர் பெருமானும் தனது காலத்தில் இப்படியான ஓர் உருக்கமான வேண்டுகோளையே திருக்கேதீஸ்வரத்தின் பொருட்டு விடுத்தார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்டுகிறேன் என்றார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசுகையில் நமது புண்ணியப் பயனாக திருக்கேதீஸ்வரத் திருப்பணிக்கு நிதி உதவிசெய்யக்கூடிய ஒரு சந்தர்ப்பம் நமக்கு ஏற்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் இருக்கும் ஒவ்வொரு சைவாபிமானியிடமும் சென்று பொருள் சேர்க்க வேண்டும் என்றார்.

திரு. ச. அம்பிலைவாணன் பேசுகையில் 'திருக்கேதீஸ்வரத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டியது எமது கடன். திருக்கேதீஸ்வரம் திருப்பணிச்சபையார்எடுத்த இம் முயற்சி வெற்றிபெற யாம் அனைவரும் இயன்றளவு நிதியை அள்ளிக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தவரின் நிதியும் சேரவேண்டும். பரந்த அடிப்படையில் கொடித்தினம் ஒன்றை நடாத்துதல்வேண்டும் என்றார்.

திருவாளர்கள் வ. வாரித்தம்பி, க. சிதம்பரப்பிள்ளை, முதலியார் முத்துத்தம்பி, திரு. குமாரசுவாமிப் புலவர் உட்பட பலர் உரையாற்றினர்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபைக்கு பொருள் சேர்க்கும்முகமாக யாழ்ப்பாணக் கிளை ஒன்றும் அமைக்கப்பட்டது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஆசிச்செய்தியும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

நயினாதீவு கி. ச. உபதலைவர்

யாழ்ப்பாணம், சனி

நயினாதீவு கிராமசபையின் புதிய உப தலைவராக 8-ம் வட்டார அங்கத்தவர் திரு. சி. நா. மதியாபரணம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்திரிகர் அன்னதான சபை ஆரம்ப சர்த்தாக்களில் ஒருவரும் கொழும்பு - நயினா செம்மணத்தம்புலம் வாலிபர் மன்றத் தலைவரும் கொழும்பு - நயினா பொதுப்பணிக் கழகப் பாதுகாவலரும் வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் இன்னும் பல சமய ஸ்தாபனங்களின் சமயத் தொண்டருமாகிய இவர், கொழும்பு. முகத்துவாரம். கட்டக்குளி, நயினாதீவு லங்கா மண்ணெண்ணெய் வினியோகிப்பாளராகவுமாவர்.

தபாலில் வந்த கடிதமில்லாத உறை

குருநகர், வெள்ளி

நல்லூரைச் சேர்ந்த எஸ். பாலசுப்பிரமணியம் என்பவருக்கு யாழ்ப்பாணக்கரணி அலுவலகத்திலிருந்து கடிதமில்லாத வெறும் தபால் உறை ஒன்று கிடைத்துள்ளது.

அண்மையில் தெரியப்படுத்த விஸ்வமடு காணிக்கு விண்ணப்பம் செய்திருந்த குண்டசாலை பரீட்சையில் சித்தியெய்திய இவருக்கு காணி கொடுப்பதற்கான அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டதாக இது பற்றி விசாரித்தபோது காணி அதிகாரி தெரிவித்தாராம் இவருக்கு அனுப்பிய அறிவித்தல் கடிதம் மாயமாய் மறைந்த மர்மம் பற்றி ஆராயப்படுகிறது.

120 மாணவருக்கு 2 ஆசிரியர்

பருத்தித்துறை, வெள்ளி

6-ம் வகுப்புவரையுள்ள கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையிற் கல்வி பயிலும் 120 மாணவர்களுக்கு இரு ஆசிரியர் மட்டுமே இருக்கின்றனராம். கல்விநிலை பாதிக்கப்படுவதாக மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம் பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. நவரத்தினம் மூல ம் கல்வி இலாகாவுடன் தொடர்பு கொண்டுள்ளது.

.....

பிங்பொங் வெற்றி

அம்பன், வெள்ளி

வலிக்கண்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்திற்கும் அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற சர்வதாட்டப் போட்டியில் அம்பன் பிங்பொங் 2—1 கேம்ஸால் வெற்றியீட்டியது

பஸ்ஸில் கத்தியுடன் இருந்தவர் பொலிசில்

குருநகர், வெள்ளி

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து கோண்டாவிலுக்குப் புறப்பட்ட பஸ் ஒன்றில் கத்தியுடன் பிரயாணஞ் செய்ததாகக் கூறப்படும் பிரயாணி ஒருவர் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

பஸ்சில் கத்தியுடன் சிலர் இருப்பதைக் கண்ட பஸ் சாரதியும் கண்டக்டரும் பிரயாணிகளுடன் பஸ்ஸை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அங்கு ஒருவர்கைது செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இரு கோஷ்டிகள் முதலில் ஏறியதாகவும் சிலர் பஸ்ஸிலிருந்து இறங்கிவிட்டதாகவும் தெரிகிறது. விசாரணை தொடர்கிறது.

புலோலி பனம் பொருள் உற்பத்தி நிலையம்

சிலநாட்களில் இயங்க ஆரம்பம்

புலோலி, வெள்ளி

புலோலியில் மிக விரைவில் பனம்பொருள் உற்பத்தி நிலையம் செயல்பட விடுக்கின்றது. புலோலி பனை நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் கீழ் இயங்கும் இந்நிலையத்திற்கான கட்டிடத்தைத் தென் புலோலி மக்கள் சிரமதானமூலம் கட்டிமுடித்துள்ளனர். அரசாங்க உதவியும் அளிக்கப்பட்டபோதிலும் பெறுமதியாய்ந்த இக்கட்டிடம் மிகக் குறைந்த செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை இன்னும் சில நாட்களில் இயங்கத்தொடங்கவுள்ளது.

நேற்று முன்தினம் இந்நிலையத்திற்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவைச் சங்கப் போஷகர் திரு வ. இராசையா மாலையிட்டுவரவேற்றார். செயலாளர் திரு க. தங்கவேலு நிலையத்தின் முழுவிபரங்களையும் எடுத்துச் சொல்லி எதிர்காலத்தில் நவீன முறையில் பனை ஏறும் தொழிலைச்செயல்படுத்தவும், பழரசம், அவித்த பனங்கிழங்கில் இருந்து சுவையான சிற்றுண்டி, பானிப்பனாட்டு, சொக்லேட் முதலியவைகளைத் காலத்துக்குக்காலம் செய்து தொழிற்சாலையை தொடர்ந்து ஓடச் செய்யவும் இந்நிலையம் பாடுபடுமெனக் கூறினார்.

அரசாங்க அதிபர் பேசும்பொழுது இவ்வூர்வாலிபர்களின் சலியாத உழைப்பையும் முன்மாதிரியையும் பாராட்டியதுடன் மற்ற அயல் கிராமமக்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்றும், இப்படியான சிரமதான மூலம்தான் மக்கள் நாளடைவில் முன்னேற முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அபிவிருத்திச்சபைஅதிபர் திரு. நாராணிக்கநடராசா, காரியாதிகாரி, திரு எஸ். ஜெயகாந்தன்பனம்பொருள் ஆராய்ச்சிக்குழுவை சேர்ந்த திரு. கே. வேலுப்பிள்ளை திரு. எஸ். செல்லையா ஆகியோரும் வைபவத்தில் கலந்துகொண்டனர். ——

சிரமதானமூலம் திருத்தினர்

சுழிபுரம், வெள்ளி

மண்டைதீவுப் திருக்குறள் சனசமூக நிலையம் சிரமதானமூலம் திருத்தப்பட்டுள்ளது. நிலைய உறுப்பினர்கள் சிரமதானமூலம் நிலையக் கட்டிடத்தைத் திருத்தி வேலியும் போட்டுள்ளனர்.

விஞ்ஞானக் கல்விக்கு முட்டுக்கட்டை

எழுநூறு பிள்ளைகள் கல்வியிலும் இம்மகாவித்தியாலயத்தின் வருத்தத்துக்குரிய நிலையை நீக்கக் கல்வி இலாகா இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமை சகிக்கக் கூடியதல்ல.

எழுபத்தைந்துக்கு அதிகமான வறிய பிள்ளைகள் இப்பாடசாலையின் ஆயிலிக் உள்ள ஆதாரக்கல்விக் குருகுலத்திற்றங்கி இதே பள்ளியில் உயர் வகுப்புகளில் கல்வி பயில்கின்றனர். அன்றியும் கத்தோலிக்க சமயத்தாபனமாகிய ஆரோக்கண விடுதியிற் தங்கிக் கல்வியிலும் ஐம்பதுக்கு அதிகமான பிள்ளைகளும் இப்பாடசாலையிலேயே உயர்வகுப்புக்களிற் கல்வி பயில்கின்றனர்.

கிளிநொச்சித் தொகுதியில் இப்பாடசாலையொன்றிலேயே விடுதிகளிற் தங்கியிருந்து கல்விபயிலும் பெருவாய்ப்புண்டு. விரிவான சனத்தொகை கூடிய குடியேற்றத்திட்டமும் இப்பாடசாலையின் சூழலிலேயே அமைந்துள்ளது இதனால் இப்பாடசாலையின் வளர்ச்சியும், பிள்ளைகள் தொகையும் இன்னும் கூடிக் கொண்டேவரும்.

இப்படியிருக்க இப்பாடசாலையில் எவ்வித விஞ்ஞான பட்டதாரிகளையும் இதுவரை நியமிக்காது இப்பாடசாலைப் பிள்ளைகளின் விஞ்ஞானக் கல்விக்குப் பங்கம் செய்வது கல்வியிலாகாவால் கூடச் சகிக்கக் கூடியதல்லவே.

ஆதலால் கல்வி இலாகாவும், கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் இனியாவது கவனிப்பார்களா?

பெற்றோரும்,
மாணவர்மன்றமும்.
கிளிநொச்சி.

தபால்கந்தோர் திறப்புவிழா

பருத்தித்துறை, வெள்ளி

மேல்மாடிக் கட்டடங்களுடன் அமைந்த பருத்தித்துறை புதிய தபாற்கந்தோர் கட்டடம் இன்னும் சில மாதங்களில் பூர்த்தியாகி விடுமென்றும் செப்டம்பர் மாத மத்தியில் இது திறக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

—

'வாழ்க்கை முறையை தழுவிய நெறி'

யாழ்ப்பாணம், சனி

'சைவநெறிகள் மனிதனின் வாழ்க்கை முறையைத் தழுவிச் செல்வதோடு விஞ்ஞானக் கருத்துக்களுக்கும் ஒத்து நிற்பதால் உலகில் உள்ள சமயங்களோடு சிறந்த சமயமாக நமது சமயம் விளங்குகின்றது' என யாழ். தட்டாதெரு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசை விழாவில் பேசிய ஆசிரியர் திரு. சி. சிவரத்தினம் குறிப்பிட்டார்.

மணிவாசகர் அருளிய திருவாசகம் சமய நுட்பங்களை அறிவுறுத்துவதோடு அதனை அறிந்தவர் மனதைத் தன்வயப்படுத்தும் ஆற்றல் மிக்கது, பிறவியின் பயனைப் பெற்று இறைவனை அடையும் வழியைக் காட்டி நிற்பது திருவாசகமாகும் என அவர் சொன்னார். திரு. அ. ஞானமூர்த்தியினது சொற்பொழிவும் பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்ச்சிகளும் மாலை சுர பூசையும் நடைபெற்றன. திரு. ந. பசுபதிப்பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திருமணம்

நயினாதீவு வி. நாகமுத்து அவர்களின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் யோகநாதன் B. A. அவர்களுக்கும் நயினாதீவு உக்ளூர் ஆட்சிமன்ற உபதலைவரும் கொழும்பு முகத்துவாரம்-மட்டக்குளி - நயினாதீவு லங்கா மண்ணெண்ணெய் விநியோகஸ்தர் சி. நா. மதியாபரணம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி செல்வி பத்மசோதிக்கும் கடந்த 18-6-71-ல் நயினாதீவு 'செந்தில்' இல்லத்தில் நடந்தேறிய திருமணத்தின் போது எடுக்கப்பட்ட படம்

2882

TODAY
TODAY
TODAY
3—7—71
Commencing
TOMBOLA
Games
at 6 P. M.
A SNOW BALL GAME
for Rs 100/-
YOUNG HEARTS
SPORTS CLUB
PALMYRA COTTAGE
85, Main Street,
Jaffna

இன்று
இன்று
இன்று
3—7—71
'ரொம்பொல'
கேம்ஸ்
மாலை 6-00 மணிக்கு
ஆரம்பமாகும்
ரூபாய் 100/-க்கு
'ஸ்னோ போல் கேம்'
"யங் ஹாட்ஸ்"
விளையாட்டுக் கழகம்
பல்மேரு
கொற்றேஜ்
85, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்

அரசமைப்பு சபையில் மொழிப்பிரச்னை ஐந்துநாள் நடைபெற்ற முக்கியவிவாதம்

வகுப்பு வாதம் தலைதூக்கவில்லை

[கே. பி. ஹரன்]

ஐந்து நாட்களாக அரசியல் நிர்ணயசபையிலே மொழிப் பிரச்னையைப்பற்றி மிக முக்கியமான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தின் பெரும் பகுதியையும் நேரில் சென்று பார்த்தேன். கேட்டேன். அடங்கி இருக்கும் வகுப்புவாத உணர்ச்சிகள் மீண்டும் தலை தூக்குமோ என்று நினைத்திருந்தேன் விவாதத்தின் போது இருதரப்பினரும் வகுப்புவாத உணர்ச்சி சிறிதுமின்றி தங்கள் தங்கள் கட்சியை எடுத்து விளக்கினர். இது பெரிதும் வரவேற்கத்தக்க தொடக்கம் மிக ஆறுதலும் அளிப்பதாக இருந்தது

சென்ற வருடங்களிலே மொழிப் பிரச்னையைப்பற்றிய விவாதம் நடந்த போதெல்லாம் நாடெங்கிலும் கலவரங்கள் ஏற்பட்டன. மண்டைகள் உடைந்தன. அமைதி குலைந்தது. அக்கிரமங்கள் நடந்தன. பார்லிமெண்ட் சபைக்குள்ளும் கூட விவாதங்களில் வகுப்புவாத விஷம் பெரிதும் கலக்கப்பட்டது. ஆனால் இந்த முறை நடைபெற்ற ஐந்து நாள் விவாதத்திலும் தமிழர்களைப்பற்றியோ சிங்களவர்களைப்பற்றியோ வகுப்புவாத முறையில் ஒரு சொல்லும் கேட்கவில்லை. அரசாங்கத்தரப்பிலிருந்து 11-வது அடிப்படைத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்களும் தமிழ்ச் சமூகத்தை எதிர்த்து ஒரு வார்த்தையையும் கூறவில்லை. தமிழரசுக்கட்சியின் போக்கைத் தான் குறை கூறினர். தமிழரசுக்கட்சியினரும் வகுப்புவாத உணர்ச்சி சிறிதுமின்றி மிக அடக்கத்துடன் பேசினர். சமரசத்துக்கு மிக ஆவல் காட்டினர்.

11-வது அடிப்படைத் தீர்மானம்— (எல்லாச் சட்டங்களும் சிங்களத்தில் செய்யப்படும். அவ்விதம் செய்யப்படும் ஒவ்வொரு சட்டத்துக்கும் தமிழ்மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும்) என்று கூறுகிறது. இதற்குத் தமிழ் அரசுக் கட்சியினர் கொண்டுவந்த திருத்தம்பற்றித்தான் ஐந்து நாட்களாக விவாதம் நடந்தது. அதில் நான்கு யோசனைகள் அடங்கியுள்ளன. (1) சிங்களம், தமிழ் இவ்விரு மொழிகளிலும் எல்லாச் சட்டங்களும் இயற்றப்பட வேண்டும். (2) இவ்விரண்டும் ஸ்ரீலங்காவின் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டும். (3) இரண்டும் நீதிமன்ற மொழிகளாக இருத்தல் வேண்டும். (4) இவ்விரண்டிலும் எல்லாச் சட்டங்களும் பிரசுரிக்கப்பட வேண்டும்.

இதிலடங்கிய மேற்குறித்த நான்கு யோசனைகளையும் காலஞ்சென்ற பண்டாரநாயகாவுக்கிட்டு எல்லாக் கட்சியினரும் ஒரு சமயம் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் சிறப்பாக ஸ்ரீலங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்கட்சி இவை பல எதிர்ப்புக்களிடையும் ஆதரித்து வந்தனவாயும் இன்றைய நிலையில் இவற்றை ஒப்புக்கொள்ளமுடியாவிடில் தாங்கள் சமரசத்துக்கு தயாரென்றும் தமிழரசுக்கட்சியினர் வாதித்தனர். அரசியல் நிர்ணயசபையில் பேசி சமரச முடிவுக்கு வரமுடியாதென்றும் எல்லாக்கட்சித் தலைவர்களும் வெளியேகூடி இதைப்பற்றிப்பேசி விட்டுக் கொடுத்து சமரச முடிவுக்கு வரவேண்டுமென்றும் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. என் நவரத்தினம் கேட்டுக் கொண்டார்.

அவர்பேசிய நாளில் அரசாங்க பார்லிமெண்ட் கட்சிக் கூட்டம் நடப்பதாயும், ஏதாவது சமரசமுடிவு ஏற்படப் போகிறதென்றும் பலத்த வதந்திகள் அடிபட்டன. பல மெம்பர்களின் பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டிருக்கையில், ஒரு [சிங்கள] பத்திரிகைக்காரர் என்னிடம்வந்து 'இந்தப் பேச்சுக்களெல்லாம் வெறும் நாடகம் என்றுதைப்பு. சமரசம் வரப்போகிறது' என்று சொன்னார். சமரசம் ஏற்படாவிடில், தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணயசபையிலிருந்து வெளியேறுமென்றும் சில நாட்களில் ஐக்கிய தேசியக்கட்சியும் வெளியேறுமென்றும், பின்னர் அச்சபையில் அரசாங்கக் கட்சியினர் மட்டுமே இருப்பரென்றும் அவ்விதம் நிலைஏற்பட, அரசாங்கக்கட்சியினர் விரும்பவில்லையென்றும் சொல்லப்பட்டது

ஆனால் எதிர்பார்த்த சமரசம் ஏற்படவில்லை. 'அரசியல் அமைப்பு, பிரஜா உரிமை, அடிப்படைஉரிமை, இவைபற்றி நாங்கள் பல திருத்தங்கள் கொண்டுவந்தோம். அவையெல்லாம் நிராகரிக்கப்பட்டன. எங்கள் மொழிஉரிமைக்கும் அவ்விதம் ஏற்பட விரும்பவில்லை. ஒரு சமரசத்துக்காக பிரதமமந்திரி உள்ளிட்டு பலமந்திரிகளுடனும் பேசினோம். பேச்சுக்கள் கமுமாக இடுப்பினும், அதனால் பயன் ஏற்படவில்லை. யார்மீதும் எங்களுக்குக் கோபமில்லை. இப்பேச்சுக்களில் கலந்துகொள்வதால் பயனில்லையென்று உணர்ந்துவிட்டோம். இதற்காக வெளிநடப்புச் செய்யப் போவதில்லை. இன்றைய கூட்டம் முடியும்வரை இருப்போம். எனிமேல் இங்கு வரமாட்டோம்' என்று தமிழரசுக்கட்சித் தலைவர் ஓர் அறிக்கையை சபையில் படித்த போது, எங்கும் நிசப்தமாக இருந்தது. எதிர்ப்புக்குரல் ஒன்றுகூட எழவில்லை

இனி தமிழரசுக்கட்சியினர் என்ன செய்யப்போகிறார்கள்? இதையும்கேட்ப்பாய்ப்பிரதிநிதி கதிரவேலுப்பிள்ளை விளக்கினார். இச்சபைக்கு வரா விடினும், பார்லிமெண்ட் சபைக் கூட்டத்திலும் தேசியசபைக்கூட்டத்திலும் கலந்துகொண்டு அரசாங்கம் கொண்டுவரும் முன்னேற்றமான முயற்சிகளுக்கு ஆதரவளித்து ஒத்துழைப்போம்' என்றார் அவர்.

முடிவில் 11-வது அடிப்படைத்தீர்மானம் அதாவது சிங்களத்தில் எல்லாச்சட்டங்களும் இயற்றவேண்டும், அவ்விதச் சட்டங்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்புமிருக்க வேண்டும்என்பது சபையின் வாக்குக்கு விட்டபோது தமிழரசுக்கட்சி அதை எதிர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வாக்கெடுக்காமல் இருந்துவிட்டனர். அவர்கள் எதிர்த்திருப்பின், சிங்களமெம்பர்களுக்கு ஆதிக்கம்வந்து, வகுப்புவாத உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டிருப்பர். அந்த அளவில் தீர்க்கதரிசனத்துடன் தமிழரசுக்கட்சி நடந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

சபையில் வகுப்புவாதம் தலை தூக்காமலிருந்ததற்கு மற்றோர் முக்கியமான காரணமுண்டு. அதை இனி கவனிக்கலாம்- (தொடரும்)

மொழிப்பிரச்னை...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

நிர்ணயசபை நடவடிக்கைகளிலிருந்து விலகியிருப்பதென்று தீர்மானித்த இரு தமிழரசுக் கட்சியினரை கண்டித்தார்.

அரசியல் நிர்ணயசபையிலிருந்து விலகியிருப்பதன் மூலம் தமிழரசுக் கட்சியினர் தங்கள் இலட்சியத்தை அடைவதில் முன்னேற்றம் காண முடியாதென்றும் அவர் சொன்னார்

ஐரோதயவப் பிரதிநிதி திரு பிரின்ஸ் குணசேகரா பேசுகையில் திரு ஸி. எக்மாமாட்டின் மட்டும்தான் மூன்றுள்ள சமஷ்டிவாதியென்றும் இவரைப்போல் மற்றைய சமஷ்டிவாதிகளும் மூன்றிருந்திருந்தால் மொழிப்பிரச்னை எப்போதோ சமரசமாகத் தீர்க்கப்பட்டிருக்குமென்றும் கூறினார்.

பதினான்காவது அடிப்படைத் தீர்மானம் பிரேரிக்கப்பட்டபோது திரு ஜே. ஆர் ஜயவர்த்தனா தமது பெயரிலுள்ள திருத்தப் பிரேரணையைப் பிரேரித்தார். திருவாளர்கள் ஜயவர்த்தனா, டட்லி சேனநாயகா எஸ் ஜே வி. செல்வநாயகம் ஆகியோர்களின் பெயர்களின் கீழுள்ள பிரேரணைகள் பிரேரிக்கப்படவில்லை திரு பிரின்ஸ் குணசேகரா தமது பெயரிலிருந்த பிரேரணையை வாபஸ்பெற்றுக் கொண்டார்.

—...

ஸ்ரீ லங்காவின்...

1ம் பக்கத் தொடர்ச்சி

14வது தீர்மானம் குடியரசின் ஜனாதிபதியொருவர் இருத்தல் வேண்டும். ஜனாதிபதி அரசியலமைப்பின் தலைவராகவும் ஆயுதம் தாங்கிய படைகளின் படைத் தலைவராகவுமிருத்தல் வேண்டும். ஜனாதிபதி பிரதம அமைச்சரால் குறிக்கப்பட வேண்டும். அவர் விதிக்கப்பட்ட சத்தியப் பிரமாணத்தைச் செய்துகொண்டதும் ஜனாதிபதியாவார். ஜனாதிபதி பதவிக்காலம் அரசியலமைப்பில் விதிக்கப்படும்

15வது தீர்மானம் அரசியல் அமைப்பில் வேறு விதமாக ஏற்பாடு செய்யப்படாதிருக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர ஜனாதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனையின்மீது செயலாற்றுதல் வேண்டும்,

...

கம்யூனிஸ்ட் கட்சி

யாழ். மாவட்டக் குழு நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ் மாவட்டக் கிளை கடி யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் பிரச்னைகள் சம்பந்தமாகவினாதித்தது இதுபற்றி அடுத்துவரும் குழுக் கூட்டத்தில் விவாதிப்பதெனத் தீர்மானித்ததுடன் விவசாயத்துவரும் கட்சியின் வேலைகளைக் கவனிக்க குழு உறுப்பினர்களுக்குக் கடமைகள் வரையறை செய்யப்பட்டன

மாவட்டக்குழு நிர்வாகிகளும் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். அமைப்பாளர் திரு ஐ ஆர் அரியரத்தினம், செயலாளர் திரு வ பொன்னம்பலம், உதவிச் செயலாளர் திரு அ வைத்திலிங்கம், பொருளாளர் திரு கே நவரத்தினம்.

——

அன்பளிப்பு

குருநகர் வெள்ளி ஊர்காவற்றுறை சிவன் கோவிலுக்கு கரம்பனைச்சேர்ந்த திரு. நா சந்தையா என்பவர் 5000 ரூபா பெறுமதியான கயிலாய வாகனமொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் அறிஞர்கள்

அமைச்சர் சுபசிங்கா தகவல்

கோட்டை, வெள்ளி

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் அறிஞர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள் இந்தத் தகவலை வர்த்தகத் தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா அறிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற பட்டதாரிகள் பயிற்சி திட்டமொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் இதனை வெளிவிட்டார்.

இலங்கையில் பரவலாகவுள்ள இயற்கை வளத்தை உபயோகித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தக் கூடிய வகையில் புதிய திட்டம் செயல்படுமென்று கூறினார் அமைச்சர் சுபசிங்கா.

அரசாங்கம் ஏற்கனவே எடுத்துள்ள கைத்தொழில் முயற்சிகளை மேலும் சிறப்பாகச் செய்யும் விதத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார் அமைச்சர்.

கைத்தொழில் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுவதற்கு 110 பட்டதாரிகளுக்கு 6 வாரகாலத்துக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்படுமென்றும் அமைச்சர் சுபசிங்கா கூறினார்.

நாட்டிலுள்ள அறிஞர்களின் அறிவையும், ஆற்றலையும் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் அரசாங்கம் ஏற்கனவே பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டசபை அஞ்சலி

சென்னை, ஜூலை 2

தமிழ்நாடு சட்டசபை மரணமடைந்த ரஷ்ய விண்வெளி வீரர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்தியது. சபாநாயகர் திரு. கே. ஏ. மதியழகன் 'இத்துயரச் சம்பவம் மனித குலத்துக்குப் பேரிழப்பு' என்று கூறினார். சபையில் ஒரு நிமிட நேரம் அவர்களுக்காக எழுந்து நின்று அங்கத்தவர்கள் மௌனம் அனுஷ்டித்தனர்.

——

பெருமாள் கோயில் கும்பாபிஷேக இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் கும்பாபிஷேக வைபவத்தில் இன்று காலை 8 மணிக்கு யாக பூஜையும் மாலை 6 மணிக்கு நாமபாராயண பஜனையும் நடைபெறும்.

நயினாதீவுக்கு பஜனை யாத்திரை

யாழ்ப்பாணம், சனி

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ரதோற்சவ, தீர்த்தோற்சவதினங்களில் பஜனை நிகழ்த்தும் நோக்கமாக வண்ணை வைத்தீஸ்வரன் பஜனைச்சபையினர், தேவஸ்தான விநாயகர் கோயிலிருந்து குடிவிடுதலை ஆறுமுகம் தலைமையில் வருகிற திங்கட்கிழமை காலை 5-30 மணிக்கு மேற்படி தேவஸ்தானத்திலிருந்து குறிகட்டுவான் வரைக்கான நயினைபம்பதிக்கு பஜனை யாத்திரைசெல்ல தீர்மானித்துள்ளனர். நல்லூர் பஜனைச் சபையினரும் இப் பஜனையாத்திரையில் கலந்து கொள்வர்.

நேர்முகப் பரீட்சையில் தோற்றாதவருக்கு காணி

குருநகர், வெள்ளி

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத மண்டைதீவைச் சேர்ந்த ஒருவருக்கு வில்வமடு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் காணி கொடுப்பதற்கான அறிவித்தல் கிடைத்துள்ளதாகவும் இக்குடியேற்றத் திட்டத்திற்கென காணிக்கச்சேரியில் நேர்முகப்பரீட்சைக்குச் சென்றவர்கள் இதுபற்றி மாவட்ட காணி அதிகாரியிடம் புகார் செய்துள்ளனர்.

கல்வி வட்டாரங்களில் பரீட்சார்த்த பாடசாலைகள்

கோட்டை, வெள்ளி

ஒவ்வொரு கல்வி வட்டாரங்களிலும் பரீட்சார்த்த பாடசாலைகள் நிறுவப்படவுள்ளன. நகரங்களிலுள்ள பிரபலமான பாடசாலைகளில் தம் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் பெற்றோரின் ஆர்வத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவே இந்தப் பரீட்சார்த்த பாடசாலைகளை நிறுவக் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஒவ்வொரு கல்வி வட்டாரப்பிரிவிலும் நான்கு பரீட்சார்த்தப் பாடசாலைகள் நிறுவப்படும். இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக செயற்குழுவொன்று திரு கிறிசேனா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. இத்தப் பரீட்சார்த்த பாடசாலைகளை நிறுவும் திட்டத்துக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை அளிக்குமாறு கல்வி அமைச்சு கோரியுள்ளது.

பஸ்ஸில் ஜேப்படி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறையிலிருந்து இபோச பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு நியாயவாதி நேற்றுமுன்தினம் ஜேப்படிக்காரருக்கு இலக்காகித் தமது பணப்பையைப் பறிகொடுத்தார். இப்பாதையில் சமீப காலத்திலிருந்து இவ்விதம் ஜேப்படிகள் அடிக்கடி நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது. .....